Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 277

வியாழக்கிழமை
29 ஓகஸ்ட் 2024

ஆவணி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"உதுக்கு கூட பஞ்சம் வந்து ஆளையாள் கொப்பியடிக்கினம் எண்டால் நாடு நல்லா விளங்கும் பாருங்கோ"



## மன்னாரில் கோரவிபத்து; மூவருக்குப் படுகாயம்!

மன்னார், ஓக. 29

மன்னார், உயிலங்குளம் பகுதியில் பட்டாரக வாகனமும், இரண்டு மோட்டார்சைக்கிள்களும் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் உடனடியாக முருங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

11

## மக்களின் ஆசியுடன் ஆட்சிக்கு வருவேன்!

### 'டீல்' அதிகாரம் தேவையில்லை அம்பாறையில் சஜித் முழக்கம்

கொழும்பு, ஓக. 29

எவருடைய புண்ணியத்திலும் ஜனாதிபதி பதவிக்கு வருவதற்கான தேவைப்பாடு எனக்கு இல்லை. நான் மக்களின் ஆசியுடன் தான் ஜனாதிபதியாக வருவேன். டீல் அரசியலும், டீல்

11



## வவு. கொலை ஒருவர் கைது

வவுனியா, ஓக. 29

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுவிஸ் நாட்டில் இருந்து வருகைதந்த

11

# தமிழரசுக் கட்சிக்குள் விரைவில் தனியணி?

### விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 29

தமிழரசுக் கட்சிக்குள் மாற்று அணியொன்று உருவாகவுள்ளதாக நானும் அறிகின்றேன். அவ்வாறு நடந்தால் அதற்கு ஒருவரே காரணமாக இருப்பார் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

11

### ஜனாதிபதித் தேர்தலை

## தமிழர் தரப்புக் கோரிக்கைக்கான சர்வஜன வாக்கெடுப்பாக்குவோம்!

### தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்குமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 29

தமிழ் மக்கள் தங்களின் கோரிக்கைகளுக்கான சர்வஜன வாக்கெடுப்பாக, ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும் என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தால் நேற்று மாலை வெளியிடப்பட்டுள்ள

11

## ஜனாதிபதித் தேர்தல்; 23 வேட்பாளர்கள் கப்சிப்

கொழும்பு, ஓக. 29

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில், 23 வேட்பாளர்கள் தாம் சார்ந்த பரப்புரை நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இந்த விடயம் சுடடிக்காட்டப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதி

11

## யாழ்ப்பாண நகரப்பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணம் பேருந்துத் தரிப்பிடம் உள்ளிட்ட, யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகக் கேட்போர்

11

## காய்ச்சலால் ஒருவர் சாவு

யாழ்., ஓக. 29

சுமார் 20 நாள்களாகத் தொடர்ந்த காய்ச்சல் காரணமாக வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

அன்னலக்ஷ்மி நடராஜா (வயது- 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நாரந்தனை மத்தி, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அந்த வயோதிபப் பெண், கிளிநொச்சியில் கடந்த 7ஆம் திகதி தங்கி

11

## எந்த விஞ்ஞாபனம் உண்மையானது?

### கட்சிகள் பிடுங்குப்பாடு

கொழும்பு, ஓக. 29

ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தின் உண்மைப் பிரதி தம்முடையது என்றும், அவற்றை ஏனைய கட்சிகள் பிரதி செய்கின்றன எனவும் முன்னணி வேட்பாளர்களைச் சார்ந்த தரப்பினர் பரஸ்பர குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

11

## விஷஜந்து தீண்டி ஒருவர் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 29

விஷஜந்து ஒன்றால் தீண்டப்பட்ட குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

11

### யாழ். மாவட்டத்தில்

## ரூபா 322 மில்லியன் செலவில் 826 திட்டங்கள் முன்னெடுப்பு!

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 826 திட்டங்களுக்காக 322 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 734 திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன என்று வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.


11





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் மகிழ்விலேயே நாட்டின் உயர்வுண்டு



## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக.29**

**அனைத்து மக்களுக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்கும் தொலை நோக்குப் பார்வைகொண்ட புதிய இலங்கையைக் கட்டியெழுப்பும் திட்டம் உள்ளடக்கிய தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை இன்று முன்வைக்கவுள்ளேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும். ஏற்றுமதி வருமானத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். எதிர்காலம் குறித்து சிந்தித்துச் செயற்படவேண்டும்.
ஜே.வி.பி.யின் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் குறைந்த பட்சம் 200 பில்லியனுக்கு மேல் வருமானம் குறையும். வரி வருமானம் குறைந்தால், எப்படிச் செலவுகளை அதிகரிக்கமுடியும். நாம் இதுவரை பயணித்த பாதையில் தொடர்ந்து செல்லவேண்டும். அந்தப் பாதையில் இருந்து விலகமுடியாது. வரி அறவிடுவதை நிறுத்துவதாக சிலர் சொல்கின்றனர். தொங்கு பாலத்தை வெட்டி விட்டுச் சென்றால், ஆற்றில் தான் விழ நேரிடும். அடுத்த வருடம் முதல் உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைப்போம். தொழில் வாய்ப்புகளை உருவாக்குவோம். எனது திட்டம் பொருளாதார முகாமைத்து வத்தை ஏற்படுத்தி வருமானத்தை அதிகரிப்பதே.
கைத்தொழில்கள் உருவாகும்போது வருமானம் உயரும். விவசாய நவீன மயமாக்கலுடன் பொருளாதாரம் உயரும்.- என்றார். (ச-44)

# ஜனாதிபதி செயலக நிதி: எம்.பி.களுக்கானது அல்ல

## சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஓக.29
ஜனாதிபதி செயலகத்தால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி நேரடியாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்றதே தவிர எந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் நேரடியாகக் கொடுக்கப்படவில்லை.
-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பெருமளவு நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தவறான விஷப் பரப்புரைகள் வெளியிடப்படுகின்றன. அந்த நிதியானது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டது போன்ற தோற்றப்பாடு வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகிறது.
பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிதி மற்றும் பல்வேறு அபிவிருத்திக்காக நிதி ஜனாதிபதி செயலகத்தால் இவ்வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் அபிவிருத்திக்காக முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்தன. கோரிக்கைகளின் அடிப்படையில் வெவ்வேறு தொகைகள் ஜனாதிபதி செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அந்தப் பணம் அபிவிருத்திப் பணிகளுக்காக நேரடியாக மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்றதே தவிர எந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் நேரடியாகக் கொடுக்கப்படவில்லை- என்றுள்ளது. (ச-20)

# ரணிலின் மேடையில் மஹிந்தவுக்குப் பாராட்டு

## தடுமாறிய பெண் எம்.பி.

கொழும்பு, ஓக.29
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரை மேடையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை புகழ்ந்து பாராட்டிய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.
பொதுஜன முன்னணியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி ரணிலின் பக்கம் சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஜிகா விக்ரமசிங்கவே இந்தத் தவறை நிகழ்த்தியுள்ளார்.
மாவனல்லயில் நடைபெற்ற பரப்புரைக்கூட்டத்தில் மேடையேறிய அவர்,
" நாட்டு மக்களின் துன்பத்தைப் போக்கிய, நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்த தலைவர் மஹிந்த ராஜபக்சவே" என நாடாளுமன்ற உறுப்பினர் ரஜிகா தெரிவித்துள்ளார்.
பின்பு ரணிலின் மேடையில் மஹிந்தவை புகழ்ந்துவிட்டோம் எனப் புரிந்துகொண்ட அவரே உடனடியாக அந்தத் தவறைத் திருத்தி ரணிலின் பெயரைக் கூறியுள்ளார்.
இந்தச் சம்பவம் தற்போது சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகின்றது. (ச-இ)

# மாற்றுத்திறனுடையோர் விண்ணப்பிக்க காலக்கெடு

கொழும்பு, ஓக.29
நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க விரும்பும் மாற்றுத்திறனாளிகள் செப்ரெம்பர் 14 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.
கிராமசேவகர் பிரதேசசெயலர் ஆகியோரின் சிபார்சுடன் மருத்துவச்சான்றிதழையும் இணைத்து அனுப்பி வைக்குமாறு தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
மாற்றுத்திறனாளிகளுக்கு வாகன வசதி தேவைப்படும் பட்சத்தில் அதையும் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டுமெனவும் தேர்தல் அதிகாரிகள் அதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வார்கள் எனவும் தேர்தல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-6)



# தமிழ்ப் பொதுவேட்பாளர் வினோ எம்.பி. எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், ஓக.29
கட்சி எடுத்த முடிவு சரியோ தவறோ என்பதற்கப்பால் தனிப்பட்ட ரீதியில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற முடிவோடு நான் இணங்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமிழ்ப் பொதுக்கட்டமைப்பினர் திருந்துவதற்கான ஒரு வாய்ப்பை தேர்தல் முடிவுகள் நிச்சயம் உணர்த்தும். அவருக்கு ஆதரவில்லாத நிலைப்பாடுகள் அங்கத்துவக் கட்சி உறுப்பினர்களிடத்திலும் உள்ளது- என்றார். (ச-110)

# ரணில் வந்திருந்தால் தமிழீழம் மலர்ந்திருக்கும்

## கூறுகிறார் டலஸ் எம்.பி.

கொழும்பு, ஓக.29
2005 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றிருந்தால் இந்நேரம் தமிழீழம் மலர்ந்திருக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு திரட்டி அம்பாறையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
2005 ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்சவுக்கு 50.03 சதவீத வாக்குகளே கிடைக்கப்பெற்றன.
சிலவேளை அத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்று ஜனாதிபதி ஆகி இருந்தால்,ஐக்கிய நாடுகள் சபையில் 192 ஆவது நாடாக ஈழம் தேசம் இடம்பெற்றிருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்ததால்தான் நாடு பாதுகாக்கப்பட்டது- என்றார். (ச-44)

# தேர்தல் வன்முறை; சுமணரத்ன தேரர் கைது

மட்டக்களப்பு, ஓக.29
மட்டக்களப்பு மங்களாராம விகாரையின் தலைவர் அம்பிட்டியே சுமணரத்ன தேரர் அம்பாறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். தேர்தலின் போது வன்முறையைத் தூண்டியமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் பேரில் தேரர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சுமணரத்ன தேரரை நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)

# அநுரவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.29
தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சிவில் மக்கள் புரட்சி அமைப்பால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஜனாதிபதி வேட்பாளர் என்ற ரீதியில் அநுரகுமார தாக்கல் செய்துள்ள சொத்து விவரங்களின் அடிப்படையில் அநுர அரச சொத்துகளை துஷ்பிரயோகம் செய்துள்ளதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கமயிலில் நல்லூரான்



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 19 ஆம் திருவிழாவின் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது நல்லூர் வேற்பெருமான் தங்கமயில் வாகனத்திலும், வள்ளி, தெய்வானை நாயகியர் தங்க அன்ன வாகனங்களிலும் வீதி உலா வந்தனர். (ச-45-66)

நல்லைக்கந்தனுக்கு
இன்று (29.08.2024) வியாழக்கிழமை
21 ஆம் திருவிழா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
N. S. R. திருமண மண்டபம்
திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் கொண்டாட்டம், ஒன்றுகூடல் நிகழ்வுகள்தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப சைவ, அசைவ உணவுகள் வழங்கப்படும்.
No.1,2nd Floor, Ruban Complex
Stanley Road, Jaffna.
021 222 4452

## நல்லூர்த் திருவிழா 21 ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.29

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இன்று 21ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ. நாகேந்திர சிவாகரக்குருக் கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தியடைப்பு கதிரேசன் அறநெறிப் பாடசாலை, தம்பாட்டி முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை, புளியங்கூடல் தங்கம்மா மடாலய அறநெறிப் பாடசாலை, நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அறநெறிப் பாடசாலை, கணபதீஸ்வரன் சிவன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

விசேட நிகழ்வாக திருமதி கவிதா வாமதேவ சர்மா மாணவர்கள் வழங்கும் "விரலிசை கானங்கள்" நிகழ்வும், ஊர்காவற்றுறை நர்த்தனாலய மாணவர்கள் வழங்கும் நடன நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-45)

## நல்லூரான் சிறப்பம்சம்



## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.29

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளன.

மல்லாகம் கந்தையா சபேஷன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. (ச-45)

## நல்லூர் ஆலயத்துக்கு சிறப்பு பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஓக.29

நல்லூர் கந்தசுவாமிகோவில் தேர், தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு அடுத்தமாதம் முதலாம் மற்றும் 2 ஆம் திகதிகளில் தீவுப்பகுதியிலிருந்து செயற்படும் பேருந்து உட்பட சகல பாதைகளிலும் செயலாற்றும் இலங்கை போக்குவரத்துச் சேவை யாழ். சாலையின் பேருந்துகள் அனைத்தும் புறப்படும் இடங்களிலிருந்து நல்லூர் ஆலயம் வரை செயலாற்றும் என யாழ்.சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ச-25)

## நல்லை வீதியில் திருஉலா வருகிறார்

அழகொளிர் அலங்கார நல்லூரா என
அடியார்கள் வானதிர அழைத்திடவே
கோலமா மஞ்சைதனில் குலவிய குமரனாய்
காலகாலமாய் கண்கள் குளிர்ந்திட
வள்ளி - தெய்வயானை பங்கராய்
தெள்ளுதமிழ் திருவாசகம் திருப்புகழ்
அனுபூதி ஒலித்திடவே நல்லை
வீதியில் திருஉலா வருகின்றான்

ப.பாலசுப்பிரமணியம்

## சாந்தி நிலவட்டும்...!

கோபுர வாசலிலே கோலம் கண்டேன்
வாயிலின் உள்ளே கருணை கண்டேன்
சுவரெங்கும் தூய நினைவைக் கண்டேன்
தீர்த்தக் குளத்தினிலே பசுமையைக் கண்டேன்
பெரும் திரள் மக்களிடையே
புன்னகை பூக்கக் கண்டேன்
என்றும் சாந்தி நிலைத்து நிலவிட
அருள் செய்யும் உன் ஞானவேலைக் கண்டேன்

நா.ஸ்ரீவித்தியாதர்

## ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.29

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவின் 21 ஆம் நாள் நிகழ்வை முன்னிட்டு, சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் சிவகுரு ... முதல்வர் தவத்திரு ... வேலன் சுவாமி களின் 'விவேகம்' எனும் தலைப்பிலான ஆன்மீக அருளுரைஆதீனவளாகத்தில் இன்று வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும். (ச-25,100-66)



## சந்தான கோபாலர் உற்சவம்!

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த ... பெருந்திருவிழாவின் 20 ஆம் நாள் காலை உற்சவமான சந்தான கோபாலர் உற்சவம் காலை 6.45 மணிக்கு வசந்தமண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி உள்வீதி வலம் வந்து ஆலயத்தின் வடக்கு வாசல் ஊடாக பக்தர்கள் புடைசூழ சந்தானகோபாலர் எழுந்தருளி வெளி வீதி உலா வந்தார் (ச-100,66)

## நல்லூர் முருகா நலம் அருள்வாய்

எல்லா நிலையிலும் நம்மக்கள்
எதிரும் புதிருமா யிருந்தால்
சொல்லரும் துன்பங்கள் சேர்ந்து வரும்
சோதனை இதுபோல் இருக்க லாமோ?


ஒற்றுமை ஒன்றே உயர்வாகும்
உள்ளத்தில் இதனை நிறுத்தி வைப்பாய்
வேற்றுமை பேசிப் பிரிவதனால்
வேதனை தானே மிஞ்சி நிற்கும்!

அன்பே கொண்டு நாமெல்லாம்
அதிக ஒற்றுமை கொள்ள வைப்பாய்!
... தான் இருக்கு என்பதை
இன்பம் அதிலே ...
உணர்ந்து வாழ வைப்பாய்!

சிவன், மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
09 . 03 . 1958

இறப்பு
28 . 08 . 2024

## சீனித்தம்பி திலகேந்திரராசா

வசாவிளானை பிறப்பிடமாகவும் இலக்கம் 695 கண்டி வீதி, அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட சீனித்தம்பி திலகேந்திரராசா அவர்கள் நேற்று (28.08.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதி ஆராதனை நாளை (30.08.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்பு நுணாவில் கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
076 493 1743

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# சைவசித்தாந்த பண்டிதர் தேர்வு

யாழ்ப்பாண சைவபரிபாலனசபை நடத்தும் சைவ சித்தார்ந்த பிரவேச பண்டிதர், சைவசித்தாந்த பால பண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சைகள் எதிர்வரும் புரட்டாதி மாதம் நடைபெறவுள்ளது.

யாழ். நீராவியடி சைவபரிபாலனசபை மண்டபத்தில் நடைபெறும் விரிவுரைகளோடு மாணவர்களுக்குரிய ஒப்படைகள், முன்வைப்புகளும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மற்றும் நேற்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெற்றதென பரீட்சை இணைப்பாளர் காசிநாதன் தெரிவித்தார்.

மேலதிக விவரங்களை 0773492306 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

'ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ'

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



## அமரர் க.கோபி

கோபியின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதலையும், அனுதாபத் தையும் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (29.08.2024) வியாழக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதராய் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல. 36, தாளையடி லேன்,
திருநெல்வேலி.

வாழும் காலம் வரை அன்பை விதைப்போம் க.கோபி

# மரண அறிவித்தல்

பிறப்பு
28 . 01 . 1937



இறப்பு
25 . 08 . 2024

## மயிலு கனகரட்ணம்

(ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி)

அவர்கள் கடந்த 25.08.2024 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னாரின் இறுதி ஆராதனை அவரது இல்லத்தில் நாளை (30.08.2024) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பித்து பூதவுடல் மதியம் 12.00 மணியளவில் மல்லவம் சேமக்காலையில் கடற்படை [illegible] ...ளான இறுதி மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், [illegible] உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்து : 0779320 921
[illegible] : 077 [illegible] 921
அன்பழகன் : 077 957 5042

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1231) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாறும் முகங்கள்

'நல்லிணக்கச் செயன்முறையானது பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதாகத்தான் அமைய வேண்டும். அது அவசியம்' என்று இயம்பியிருக்கின்றார் இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் சன்டைல் எட்வின். அவ்வாறான ஒரு பொறிமுறையை இறுக்கமாகப் பின்பற்றியதால்தான், இனவெறி மற்றும் நிறவெறியில் இருந்து தென்னாபிரிக்காவால் இலகுவாக மீளமுடிந்தது என்றும் வெளிப்படுத்தியிருக்கின்றார் அவர். இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில், தென்னாபிரிக்கத் தூதுவர்களும், இராஜதந்திரிகளும், அதிகாரிகளும் கருத்துகளை வெளிப்படுத்துவது இதுவொன்றும் முதல்முறையல்ல. 'தென்னாபிரிக்கப் பொறிமுறையைப் பின்பற்றிய வகையிலான நல்லிணக்க முயற்சி' என்று என்றைக்கு கொழும்பு புறப்பட்டதோ, அன்று முதல் இந்த விடயத்தில் தென்னாபிரிக்காவின் பார்வை மிகக்கனதியாகவே இருந்து வந்திருக்கின்றது. ஆனால், தூதுவர் சன்டைல் எட்வின் இப்போது வெளிப்படுத்தியிருக்கும் கருத்துகளின் 'காலப் பின்னணி' மிகக் கச்சிதமானது. ஸ்ரீலங்கா இராணுவத்தை சர்வதேசநீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒருபோதும் அதற்கு இடமளியோம் என்று நாமலும், ஸ்ரீலங்காவில் போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட எவரும் தமது ஆட்சியிலோ அல்லது தம்மாலோ தண்டிக்கப்படமாட்டார்கள். மாறாக போரின்போது என்ன நடந்தது? என்பதற்காக மட்டுமே விசாரணைகள் நடத்தப்படும் என்று அநுரவும் தெரிவித்திருக்கும் பின்னணியிலேயே, நல்லிணக்கப் பொறிமுறையானது பாதிப்புற்றவரின் தளத்திலிருந்து சிந்திக்கப்படவேண்டிய விடயம் என 'இடம், பொருள், ஏவல்' பார்த்து விளாசியிருக்கின்றார் சன்டைல் எட்வின்.

பெரமுனவின் முகாம், ஒருபோதும் போர்க்குற்றங்களையோ அல்லது இனப்படுகொலையையோ ஏற்றுக்கொண்டதில்லை. போர்க்குற்றங்கள் சுமத்தப்பட்டவர்களில் 80 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் பெரமுனவின் பின்னணியைக் கொண்டிருப்பவர்கள் என்பதால், சர்வதேச விசாரணை, போர்க்குற்றம், இனப்படுகொலை, நீதிப்பொறிமுறை, சாட்சியத் திரட்டல்கள், குற்றவியல் நீதிமன்றம் இவ்வாறான சொற்பதங்களே அந்தக் கட்சிக்கு 'சிலுவையைக் கண்ட பேயின் நிலைதான்'. ஆதலால், நாமலின் கருத்துகளின் மட்டில் ஆச்சரியக் குறிக் கோடுகாட்டல்களில் அர்த்தம் இல்லை.

ஆனால், அநுரகுமாரதிஸாநாயக்கவின் நிலையோ அவ்வாறில்லை. திங்களன்று வெளியான தேர்தல் விஞ்ஞாபனத்தில், இலங்கையின் இனப்பிரச்சினை மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தன் ஆழமான பார்வையை அநுர காத்திரமானதாகவே வெளிப்படுத்தியிருந்தார். இனவாதத்தின் இதயத்துடிப்பைக் கண்டறிந்து அதைக் களையும் செயற்றிட்டங்களை அவர் வரிக்குவரி முன்வைத்திருந்தார். தொலைதூரத்தில் நம்பிக்கைக் கீற்றொன்று அந்தத் தேர்தல் அறிக்கையில் வெளிப்படவே செய்தது. ஆனால், தேர்தல் அறிக்கையை வெளியிட்டு வெறும் 24 மணிநேரத்துக்குள்ளாக, 'போர்க்குற்ற விசாரணை என்பது , போரில் என்ன நடந்தது என்பதை அறிவதற்காகவே அன்றி, போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதற்காக அல்ல' என்று தெரிவித்து பிறிதொரு தரப்பைத் திருப்திப்படுத்தியிருக்கின்றார் அவர். இலங்கையில், இனவாதத் தீயின் இருப்பே இத்தகைய திருப்திப்படுத்தும் போக்குத்தான். அத்தகைய அபத்தமான அரசியலில் அநுரவொன்றும் விதிவிலக்கல்லர் என்பதைத்தான் அவரது இறுதி நேர்காணல் கட்டியம் செய்திருக்கின்றது. போலியான நம்பிக்கையை விடவும், நேர்படியான நிராகரிப்பு பலமடங்கு பரிசுத்தம் என்பர். உண்மையான நம்பிக்கையா? அல்லது நேர்படியான நிராகரிப்பா? இரண்டில் ஒன்றை அநுர தெளிவாக வரையறுத்துக்கொள்ளவேண்டும்.



# ஐ.நா. கூட்டத் தொடர்களை தேர்தல் பரபரப்பில் மறக்காதீர்

## ரெலோ சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஓக.29**

**நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் பரபரப்புகளில் தமிழ் மக்களின் பிரதான விடயமான ஐ.நா. அமர்வுகளைப் புறந்தள்ளி விடவேண்டாம் என ரெலோ கோரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் உள்ளதாவது:
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் 57 ஆவது அமர்வு நடைபெற இருக்கும் நிலையில் ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அறிக்கை மனிதஉரிமைப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளையும் சர்வதேசத்துக்குச் சொல்வதற்கு பொதுவேட்பாளரும் ஒரு பொறிமுறையாக கையாளப்படுகிறது.
இந்த நேரத்தில் மனிதஉரிமை பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடர் எமது பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கான மிகப் பிரதான தளமாக அமைந்திருக்கிறது.
சர்வதேச நாடுகள் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்ற மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரை ஜனாதிபதித் தேர்தல் விடயங்களினால் நாம் மறந்து விடல் ஆகாது - என்றுள்ளது. (ச-27)

# வடக்குக்கு நேராக சூரியன்



கொழும்பு, ஓக.29
சூரியன், தெற்கு நோக்கிய ஒப்பீட்டு இயக்கத்தின் அடிப்படையில், இந்த ஆண்டு ஓகஸ்ட் 28 முதல் செப்ரெம்பர் 6 வரை இலங்கையின் அட்சரேகைகளுக்கு நேரடியாக மேலே செல்லும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இதன்படி நேற்று 28 ஆம் திகதி மதியம் 12.11 மணியளவில் நெடுந்தீவு, பூநகரி, தட்டுவன்கொட்டி மற்றும் சுண்டிக்குளம் ஆகிய இடங்களுக்கு நேரே சூரியன் உச்சம் கொடுக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. (ச-இ)

# சா/தரப் பெறுபேறு வரும் வாரங்களில்

கொழும்பு, ஓக.29
2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளை இரண்டு அல்லது மூன்று வாரங்களில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். (ச-66)

# இணையவழி கடவுச்சீட்டு இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக.29
கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் இணையவழி முறை தற்காலிகமாக நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதற்கமைய, வருகையின் வரிசைக்கமைய கடவுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# போதியளவு பாதுகாப்பு

கொழும்பு, ஓக.29
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்குப் போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.
சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (ச-இ)

## நாளை

30.08.2024

வெள்ளிக்கிழமை - ஆவணி - 14
சுபநேரம் : 06.05 - 07.35
ராகுகாலம் : 10.35 - 12.05

## நாளொரு நல்வார்த்தை

இளைஞன் விதிகளை அறிந்திருப்பான்,
ஆனால் முதியவர் விதிவிலக்குகளை அறிந்திருப்பார்.
-வெண்டெல் ஹோல்ம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள, பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.

➤ பில் கிளார்க் ➤ விற்பனையாளர் ➤ பக்கிங் செய்பவர்

உடன் தேவை.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புக்கு:- 077 748 8093


# அஞ்சலி நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஓக.29

அமரர் கந்தையா பாலசுப்பிரமணியத்தின் அஞ்சலி நிகழ்வு பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இணுவில் அறிவாலயத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ந.பரமேஸ்வரன் தேவாரப்பதிகம் பாடி விளக்கேற்றி வைப்பார். தவில்மேதை ஆர்.புண்ணியமூர்த்தி, பேராசிரியர்களான க.தேவராசா, க.சிறிகணேசன் மற்றும் ந.தவசோதிநாதன், தி.சந்திரஹாசன், இ.பாலச்சந்திரன், கி.கமலராணி ஆகியோர் அஞ்சலி உரைகளை ஆற்றுவர் மருத்துவர் பா.தினகரன் நன்றியுரையாற்றுவார். அனைவரையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு இணுவில் அறிவாலயத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25)

# 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18.02.1947

திருமதி
**நவரத்தினம் விசாலாட்சி**
**(ரத்தினம்)**

மீசாலை வடக்கு,
மீசாலை.



தோற்றம்
23.04.1970

செல்வி
**நவரத்தினம் ஜெயசுதா**
**(ரதி)**

**மறைவு: 01.09.1994**


**திதி: ஆவணி அபரபட்ச ஏகாதசி**
**( 29.08.2022)**

காலமெல்லாம் காத்த கரங்களை தேடியபடி
ஓடி முடிந்ததே முப்பது ஆண்டுகள்
அன்னையாக அரவணைக்க ஏழேழு பிறவிக்கும்
எம் அம்மா நீங்களே வரவேண்டும்
வானத்து நிலவாய் வையகத்தின் தென்றலாய்
உங்கள் குரல் ஒலிக்கும் என எண்ணியபடி
வாழ்கின்றோம் நாம் அனைவரும்
மண்ணிலும் இன்றி எமது இதயத்திலும் விண்ணிலும்
வாழும் உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(cs.56033) (N-1)

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



தோற்றம்
24.02.1938

மறைவு
27.08.2024

## கலாபூஷணம் முடியப்பு சிங்கராயர்
### (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

பாஷையூரைப் பிறப்பிடமாகவும், 35/6 விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முடியப்பு சிங்கராயர் அவர்கள் நேற்றுமுன்தினம் (27.08.2024) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முடியப்பு - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வின்சன் - சிசிலியா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனியம்மா, மரியசலோமை, அந்தோனிப்பிள்ளை, அன்னம்மா, மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாளினி றதீஸ்குமார் (ஆசிரியர் ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), திலீபா ஜோண்சன் (பாமா - கனடா), வசீகரன் (MLT போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), காந்திமதி சாம் கிளறன் (மதி - UK), பிறேமரஜனி றெஜினோல்ட் குறூஸ் (பிரதேச செயலகம் - மன்னார் நகரம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றதீஸ்குமார், ஜோண்சன் (கனடா), கிருபா மேரி வசீகரன் (ஆசிரியர் திருக்குடும்ப கன்னியர் மடம் - யாழ்ப்பாணம்) சாம்கிளறன் (UK), றெஜினோல்ட் குறூஸ் (முகாமைத்துவ உதவியாளர் வலயக்கல்வி அலுவலகம் - மன்னார்) ஆகியோரின் மாமனாரும், ஜொய்சன் (கனடா), ஆன்ஷெரன், ஜீவிதன், சுருதிக்கா, ஆன்ஷிரோனி, றொஷாலி; வளனிஷா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (30.08.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

35/6 விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (CS/56044) J-1

வசி - 077 645 0311
தயா - 077 592 8401
நந்தினி - 077 432 5005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். தேர்தல் தொகுதிக்கான

# தபால்மூல வாக்களிப்பு வாக்குச்சீட்டு விநியோகம்

**யாழ்ப்பாணம், ஓக.29**

**யாழ்.தேர்தல் தொகுதிக்கான தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுகள் யாவும் உரிய அலுவலகங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பிரதம தபாலகம் அறிவித்துள்ளது.**

யாழ். தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தால் ஜனாதிபதித் தேர்தலுக்கான அரச உத்தியோகத்தர்களின் தபால்மூல வாக்களிப்புக்காக மொத்தம் 21 ஆயிரத்து 773 வாக்குச்சீட்டுகள் கடந்த திங்கட்கிழமை யாழ். பிரதம தபாலகத்தில் ஒப்படைக்கப்பட்டன. இந்த வாக்குச்சீட்டுகள் இரவிரவாக தரம் பிரிக்கப்பட்டு உரிய அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அத்துடன் வெளிமாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பித்தவர்களுக்கான வாக்குச்சீட்டுகளும் தரம் பிரிக்கப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் யாழ்.பிரதம தபாலகம் தெரிவித்தது.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 4ஆம், 5ஆம், 6 ஆம் திகதிகளில் தபால்மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-17)

## 2025க்கான பாடநூல் அச்சிடலுக்கு அனுமதி

கொழும்பு, ஓக.29

2025ஆம் ஆண்டுக்குரிய இலவச பாடநூல்களை அச்சிடுவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

246 வகையான பாடநூல்களில் 71 பாடநூல்களை அச்சிடுவதற்கே அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. தரம் - 1,6,10 வகுப்புகளுக்குரிய பாடநூல்களை அச்சிடுவதற்குரிய அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை. பாடநூல்களை அச்சிடும் பணிகள் 24 நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். (ச-6)

## அபிவிருத்திக்காக ஏ.ஐ. திட்டம் விரைவில்

கொழும்பு, ஓக.29

செயற்கை நுண்ணறிவினூடாக இலங்கையை அபிவிருத்தி செய்யும் புதிய மூலோபாயத் திட்டமொன்றை அமைச்சரவையின் அனுமதியுடன் இலங்கை வகுக்கவுள்ளது. இந்தத் திட்டத்தினூடாக கல்வி, விவசாயம், பொருளாதாரம், சுகாதாரத்துறை,வறுமை ஒழிப்பு என்பன முன்னெடுக்கப்படவுள்ளன. 2030 இல் சர்வதேச சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவு மையமாக இலங்கையை மாற்றுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமென தெரிவிக்கப்படுகிறது. (ஒ-25,6)

கச்சதீவில் மீட்கப்பட்ட

## இந்திய மீனவர்கள் தூதரகத்திடம்

கொழும்பு, ஓக.29

கச்சதீவுக்கு அண்மையில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான நிலையில் காப்பாற்றப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களும் நேற்று யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். நான்கு மீனவர்களுடன் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படகு நேற்றுமுன்தினம் தண்ணீரில் மூழ்கி விபத்துக்குள்ளானது. அதிலிருந்து இரண்டு மீனவர்கள் மீட்கப்பட்டதுடன் மேலும் இரண்டு மீனவர்கள் காணாமற்போயிருந்தனர். மீட்கப்பட்ட மீனவர்கள் குமுதினிப் படகு மூலம் குறிகாட்டுவானுக்கு கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ச-27)



கிளிநொச்சியில்

## தமிழ்ப் பொதுவேட்பாளர் இரண்டாம்நாள் பரப்புரை

கிளிநொச்சி, ஓக.29

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் பா.அரியநேந்திரனுக்கு ஆதரவுகோரிய பரப்புரை கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுப் புதன்கிழமை இரண்டாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பரப்புரைப் பேரணி உருத்திரபுரம் ஊடாக பூநகரிப் பகுதியை அடைந்தது. தொடர்ந்து தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் பா.அரியநேந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் இணைந்து பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச-100,20)

## 'நீலங்களின் சமர்' நாளை ஆரம்பம்

கிளிநொச்சி, ஓக.29

'வடக்கின் நீலங்களின் சமர்' எனப்படும் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான துடுப்பாட்டச் சமர் நாளை 30 ஆம் மற்றும் 31ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. முதல் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக [illegible] திணைக்களத்தின் மாவட்டப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், [illegible] முதன்மை விருந்தினராக கிளிநொச்சி முன்னாள் மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-13)

## தினம் தெரியுமோ?

**"கனடா, கனடா" எண்டு கண்டோஸைக் கண்ட குழந்தையள் மாதிரி பறந்தோடினவை எல்லாம் இப்ப கதிகலங்கிப் போய் நிக்கினம். கனடாப் பிரதமர் ஜஸ்டின் ரூடோ போட்ட குண்டால, எங்கட ஆக்களுக்குத்தான் கடுமையான சேதம். கனடாக்காரர் என்ன தேவைக்காக விசாவை கண்டபடி எல்லாருக்கும் குடுத்தாங்களோ அந்த எல்லையையும் தாண்டி எங்கட ஆக்கள் படையெடுத்ததால தான் இப்பிடி அவசரப்பட்டு, "வெளிநாட்டுக்காரருக்கு இனி விசா வழங்கிறதை கடுமையாக்கப் போறம். இப்ப வந்திருக்கிறவைக்கும் நிரந்தரக் குடியுரிமை குடுக்கமாட்டம்" எண்டு ஜஸ்டின் ரூடோ சொல்லவேண்டியதாப் போட்டுது. அந்தாளும் தானாச் சொல்லேலை. கனடாச்சனம் சொல்ல வைச்சிட்டுது.**

**கனடா விசா ஈஸியாக் கிடைக்குது எண்டிட்டு இஞ்சயிருந்து போனவையில கனபேர் நல்ல உத்தியோகங்களில இருந்த ஆக்கள் தானாம். டொக்டர், எஞ்சினியர், விதானைமார், ரீச்சர்மார் எண்டு நல்ல உத்தியோகம் பாத்தவையெல்லாம் அதை அம்போ எண்டு விட்டிட்டு போயிருக்கினம். சிலர் மட்டும் அஞ்சு வருச சம்பளமில்லாத லீவெடுத்துப் போனவையாம், மிச்சப்பேர் "வேலை வேண்டாம் பிளைட்டைப் பிடி" எண்டு கனடாவுக்கு ஓடியிருக்கினம். அப்பிடி வேலையளை விட்டு, ஊரில இருந்த காணி, பூமியை வித்துச் சுட்டு அந்தக் காசில கனடா போனவைதான் பரிதவிக்கினம். ஏனெண்டால் இஞ்ச ஏசி ரூமுக்க சுத்துற கதிரையில இருந்து வேலை பார்த்தவைக்கு , கனடாவில போய் சாப்பாட்டுக்கடையில நிக்கிறதும், பெற்றோல் செற்றில வேலை செய்யிறதும் சரிப்பட்டு வராதெல்லோ. அதால தங்களுக்கேத்த வேலை கிடைக்குமெண்டு தேடி, சரி சாப்பாட்டுக் கடைக்கே போவம் எண்டு நினைச்சால் இப்ப அந்த வேலைக்கும் பெரும் அடிபிடியாம்.**

**சிலருக்கு இஞ்சையிருந்து கொண்டு போன காசில தான் கனடாச் சீவியம் ஓடுதாம். அதால பேசாமல் திரும்ப இலங்கைக்கே போகலாம் எண்டு முடிவெடுத்தால், இஞ்ச வந்து என்னவேலைவெட்டிசெய்யிறதுஎண்டதுதான் பெரும் யோசினையாம் கனபேருக்கு. அதால விட்டிட்டு போன வேலையைத் திரும்ப எடுக்கேலுமோ எண்டு அங்க இருந்துகொண்டே அலுவல் பாக்கத் தொடங்கியிருக்கினமாம். ஆனாலும் அந்த விளையாட்டெல்லாம் இப்ப சரிவராது போல. அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கதையாப் போட்டுது கனடா போனவையின்ர நிலைமை.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக.29

சுன்னாகம் தெற்கு அருள்மிகு சிவபுதராயர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பரத் திருவிழா நடைபெறுவதுடன், 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும், மாலை 6 மணிக்கு திருவூஞ்சலும் நடை

பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-25)

## வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்பு!

யாழ்., ஒக. 29

பருத்தித்துறை - இன்பர்சிட்டி பகுதியில் முதியவரொருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்ட முதியவர் தனிமையில் வசித்து வந்தவர் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-100)

## பனம்பழத்துக்கு மவுசு

யாழ்., ஒக.29

யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகவுள்ள முற்வெளி மைதானப்பகுதியில் காணப்படும் பனை மரங்களிலிருந்து விழும் பனம்பழங்களை போட்டிபோட்டுக்கொண்டு பொறுக்குவதில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சிலர் பொறுக்கிச்செல்லும் பழங்களை விற்பனை செய்தும் வருகின்றனர். சுற்றுலாப்பயணிகள் இந்தப் பழங்களை ஆர்வத்துடன் கொள்வனவுசெய்கின்றனர். (ஒ-25, 17)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியில் வசிக்கும்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் முன்னாள் ஆரம்பக் கல்வி பகுதித் தலைவரும் ஓய்வுநிலை ஆசிரியையுமான


**திருமதி பவளமலர் பிரபாஸ்கரன்**

அவர்கள் கடந்த (20.08.2024) அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஏ.ஜூட்சன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதை பாராட்டி இவர் மேன்மேலும் சேவையினைத் தொடர மனதார வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
திரு.திருமதி சண்முகராசா - டெய்சிராணி

(CR/42991) J-1

## கண்ணீர் காணிக்கை



தோற்றம் 24.02.1938 மறைவு 27.08.2024

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி தயாளினி றதீஸ்குமார்
அவர்களின் அன்புத் தந்தையார்


**முடியப்பு சிங்கராயர்**

கடந்த 27.08.2024 செவ்வாய்க் கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பாடசாலை சமூகம்
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 • 06 • 1949



மறைவு 31 • 07 • 2024

எமது குடும்பத் தலைவர்

**அமரர் மயில்வாகனம் அருள்சோதிநாதன்**

(ஓய்வுபெற்ற வ.பி.போ.சபை நிதிமுகாமையாளர்)

அவர்களின் மரணச்செய்தி அறிந்து எமது துயரில் பங்கு கொண்டு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர், தொலைபேசியூடாகவும், சமூக வலைத்தளங்களினூடாகவும் அனுதாபம் தெரிவித்தோர், மலர்வளையம் சாத்தியோர், கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் அமைத்தோர் அனைவருக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றிகள்.


அன்னாரின் 31ம் நாள் நினைவஞ்சலியும், மதியபோசனமும் அன்னாரின் இல்லமான "கம்பலை வளவு" பன்னாலை, தெல்லிப்பழையில் இன்று (29.08.2024) வியாழக்கிழமை நடைபெறும்.

"கம்பலை வளவு"
பன்னாலை, தெல்லிப்பளை.

குடும்பத்தினர்

(CS/56049) J-1

## இதய அஞ்சலி



அமரர்
லயன் பத்மநாதன் ஐங்கரன் (MJF, MAF)

தோற்றம் 28.07.1974 மறைவு 26.08.2024

ஆறாத்துயரில் நாம் இங்கு தவிக்க
மீளாத்துயில் நீங்கள் கொள்வதேனோ?
மதிநிறைந்த நாளில் மதிமுகம் காணாது
காலனவன் உம்மை
பாதியினில் ஏன் கவர்ந்தான் என
விடை தெரியாது விழிநீர் சொரிகின்றோம்
சிவனடியில் உம் ஆத்மா என்றும்
சரணடையட்டும்

(CS/56046) J-1

உறுப்பினர்கள்
தீவக அரிமா கழகம் - ஊர்காவற்றுறை

## மரண அறிவித்தல்



ஸ்ரீமதி பிரேமதாம்பிகை வைத்தியநாத ஐயர்

காரைநகரைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மயிலணி மற்றும் வருஷப்புலம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி பிரேமதாம்பிகை வைத்தியநாத ஐயர் அவர்கள் நேற்றுமுன்தினம் (27.08.2024) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் ஓய்வு நிலை அதிபர் அமரர் கா. வைத்தியநாத ஐயர் அவர்களின் பாரியாரும், ப்ரம்மஸ்ரீ ரவீந்திரன் (Tilakaratnam & Co) ப்ரம்மஸ்ரீ சக்திதரன் (UK), ஸ்ரீமதி சரோஜினி, ஸ்ரீமதி பாமினி ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2024) வியாழக்கிழமை வருஷப்புலத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 25, வருஷப்புலம்,
சுன்னாகம்.

தகவல்:
பிள்ளைகள்

(CS/56048) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக, 29

யாழ்.மாவட்டச் செயலகத்தின் உற்பத்தித் திறன் பிரிவின் ஏற்பாட்டில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவோர்களுக்கான சந்தைப்படுத்தல் மற்றும் அனுபவப் பகிர்வுச் செயலமர்வு யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

செயலமர்வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன், உதவி மாவட்டச் செயலர் உ. தர்சினி, முயற்சியாண்மை அபிவிருத்திக்கான பயிற்சி உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-25,66)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக.29

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழா கலாநிதி. ஜஸ்ரின்.பி. ஞானப்பிரகாசம் தலைமையில் மத்தியூஸ் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தெற்காசியாவின் எம்.எஸ்.எவ் தலைவர் கலாநிதி. தவரட்ணம் டபிள்யூ. என்.மதிமாறன், சிறப்பு விருந்தினராக இலங்கை கிரிக்கெட் தரவுப் பகுப்பாய்வாளர் விஜயசிங்கம் விதுபாலா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-45)

# புலமைப்பரிசில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.29

வடக்கு மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றமும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும் இணைந்து எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 12 மணிவரை 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இலவச புலமைப் பரிசில் கருத்தரங்கு ஒன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடத்தவுள்ளது. தொடர்ந்து பிரதேசத்தில் சேவை செய்த முன்னாள் அதிபர் திருமதி சோதிலிங்கம், லயன் ஈ.தர்ஷன், கிராமசேவகர் எஸ்.சிவகுமார், மருத்துவர் வி.குருபரன் ஆகியோர் 'பொற்பணி செம்மல்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் எஸ்.கே. தளையரட்ணம் தெரிவித்துள்ளார். (ச)




# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** நன்மையான நாள். வியாபாரத்தில் விருப்பம் நிறைவேறும். வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலகும். வார்த்தைகளில் கவனம் செலுத்த வேண்டிய நாள். திட்டமிட்டிருந்த வேலை தள்ளிப்போகும்.

**இடபம்:** நினைப்பது நிறைவேறும் நாள். உங்கள் முயற்சியில் வெற்றி அடைவீர். பணவரவு திருப்தி தரும். அதிர்ஷ்டமான நாள். மனக்குழப்பம் நீங்கும். தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள புதிய வழிமுறைகளைக் கையாள்வீர்.

**மிதுனம்:** செலவு அதிகரிக்கும் நாள். மனக்குழப்பம் உண்டாகும். செயல்களில் நெருக்கடி ஏற்படும். வரவு செலவில் கவனம் தேவை. வருவாயால் வளம் காணும் நாள். பண வரவில் இருந்த தடை நீங்கும். தொழிலில் இலாபம் அதிகரிக்கும்.

**கடகம்:** அலைச்சல் அதிகரிக்கும் நாள். உங்கள் முயற்சி இழுபறியாகும். செலவு அதிகரிக்கும் செயல்களில் கவனம் தேவை. தெய்வ வழிபாட்டில் திருப்தி காணும் நாள். உங்கள் செயல்களால் வெளி வட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும்.

**சிம்மம்:** விருப்பம் நிறைவேறும் நாள். உங்கள் அணுகுமுறையால் வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். நிதி நிலை உயரும். விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பார்த்த வரவு இழுபறியாகும். திட்டமிட்ட வேலை தள்ளிப்போகும்.

**கன்னி:** அனுகூலமான நாள். திட்டமிட்ட வேலை நடக்கும். எதிர்பார்த்த உதவி தக்க சமயத்தில் வரும். இலாபமான நாள். நீங்கள் ஈடுபடும் வேலையில் சில தடை உண்டானாலும் இறுதியில் உங்கள் முயற்சி வெற்றியாகும்.

**துலாம்:** அமைதி காக்க வேண்டிய நாள். உங்கள் விருப்பம் தள்ளிப்போகும். வரவேண்டிய பணம் இழுபறியாகும். விருப்பம் நிறைவேறும் நாள். உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தடைகள் விலகும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத சங்கடங்களை சந்திப்பீர். நினைப்பதும் நடப்பதும் வேறு வேறாக இருக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும் நாள். குடும்ப நெருக்கடி குறையும் வருமானம் திருப்தி தரும்.

**தனுசு:** உங்கள் செல்வாக்கு உயரும் நாள். இழுபறியாக இருந்த பிரச்சினை முடிவுக்கு வரும். எதிர்ப்பு விலகும். நினைத்ததை செய்து முடிப்பீர். எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய நாள். உடல் நிலையில் சில சங்கடம் தோன்றும்.

**மகரம்:** உங்கள் உழைப்பால் லாபம் காண்பீர். மறைமுகமாக தொல்லை கொடுத்தோர் விலகிச் செல்வர். எதிர்பார்ப்பு நிறைவேறும் நாள். நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும். பணியாளர்கள் ஒத்துழைப்பால் வியாபாரம் இலாபமாகும்.

**கும்பம்:** நன்மை காண வேண்டிய நாள் செயல்களில் எதிர்பாராத சங்கடங்களை சந்திப்பீர். பணிபுரியும் இடத்தில் நெருக்கடிக்கு ஆளாவீர். உங்கள் செயல்களில் நீங்கள் எதிர்பார்த்த இலாபம் உண்டாகும். வியாபாரத்தில் இருந்த தடை விலகும்.

**மீனம்:** வேலைப் பளுவால் நெருக்கடிக்கு ஆளாகும் நாள். அலைச்சல் அதிகரிக்கும். மனம் சோர்வடையும். முன்னேற்றமான நாள். பணிபுரியும் இடத்தில் செல்வாக்கு உயரும். உடன் பணிபுரிபவர்கள் ஒத்துழைப்பாக இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யப் படையினர் பலர் கைது

ரஷ்யாவின் குர்க்ஸ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் தொடர்ச்சியாக, 594 ரஷ்யப் படையினரைக் கைது செய்துள்ளதாக உக்ரைன் அறிவித்துள்ளது. குர்க்ஸ் பிராந்திய ஆக்கிரமிப்பின் பின்னர் முதல்முறை உக்ரைன் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## தேடுகிறோம்

- பெயர் : வைத்திலிங்கம் சக்திவேலன்
- வயது : 78
- மனைவி பெயர் : பவா
- பிறந்த இடம் : தருமபுரம்
- 1960 தொடக்கம் 1968 வரை கொக்குவிலில் வசித்தார்.
- பிள்ளைகள் : 2

அவுஸ்ரேலியாவில் இருந்து தொடர்புகொள்ள விரும்புகின்றோம்:

தொடர்பு: .Dr.Tharmendra:

**077 355 0940**

(CS/55989) J-1

## University of Jaffna – Sri Lanka
## Faculty of Management Studies and Commerce
## Master of Business Administration
## Intake VIII – 2022 / 2023

The Faculty of Management Studies and Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA - Intake VIII) - 2022/2023 and invites applications for the admission from qualified candidates. Details of the course can be obtained from the website of the Faculty of Management Studies and Commerce: **www.maco.jfn.ac.lk**.

### Admission requirement

A candidate seeking admission to MBA should possess at least any one of the following qualifications and exhibit a satisfactory level of English language proficiency:

1) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in Business/ Public Administration/ Business Management/ Commerce/ Business Administration/ Management Studies

2) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution including 30 credits in business/ public administration/ economics/ commerce/management studies

3) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in any discipline

   and

   a Postgraduate Diploma in business/public administration//business management/ commerce/business administration/ management studies

4) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in any discipline

   and

   a minimum of one-year post qualifying work experience in a management capacity at an organisation acceptable to the Faculty Board and the Senate of the University of Jaffna

5) Having at least one of the approved list of professional qualifications ( for details please visit: https://www.maco.jfn.ac.lk/index.php/mba/), with a minimum of three (03) years post-qualifying work experience in a management capacity at the organisation(s) acceptable to the Faculty Board and the Senate of the University of Jaffna

6) Any other qualification/experience recommended by the 'Faculty Board and the Senate of the University of Jaffna

### PROGRAMME STRUCTURE

Duration - Two years (Four (04) Semesters)
Medium of instruction - English

### COURSE FEE

Total course fee for the MBA program is LKR Four Hundred Thousand (LKR 450,000.00). This can be paid in two installments as given below:

| | | |
|---|---|---|
| Application Fees | : | Rs 2,000 |
| First Year | : | Rs 250,000 |
| Second Year | : | Rs 200,000 |

**The closing date for application: 20.09.2024.**

### APPLICATION PROCEDURE

Online Application form, Procedure and Paying in voucher can be found from the website www.maco.jfn.ac.lk

Further information could be obtained through

**021 221 6394 / 021 222 3610.**

**Registrar**

(cr43110) (N-1)

உ
ஓம் பிரம்மமே அம்மா நம



## முழங்காவில் - நாச்சிக்குடா - கரடிக்குன்றில்
## தான்தோன்றியாய் எழுந்த
## பிரம்மம் ஆதிபராசக்தி நாகபூசணி அம்பாள் ஆலயம்
## வருடாந்த உற்சவ விஞ்ஞாபனம் - 2024

**அம்பாள் அடியார்களே!**

இலங்கையின் வடபுலத்தே கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தின் முழங்காவில், நாச்சிக்குடாவில் அமைந்துள்ள கரடிக்குன்று என்னும் பதியில் தான் தோன்றியாய் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பிரம்மம் ஆதிபராசக்தி நாகபூசணி அம்பாளுக்கு நிகழும் மங்கலகரமான குரோதி வருடம் ஆவணித்திங்கள் 16ம் நாள் (01.09.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னை அருளிய சுபவேளையாகிய நண்பகல் 12.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி புரட்டாதித்திங்கள் 10ம் நாள் (26.09.2024) வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு நிறைவு பெற அன்னையின் திருவருள்பாலித்துள்ளது.

**புற்றுப் பூஜை :-**

25.09.2024 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு அன்னை சுயமாக எழுந்துள்ள புற்றுமண்டபத்தில் பூஜை ஆரம்பமாகி 26.09.2024 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு நிறைவுபெறும். இது ஒரு விஷேட தொடர்பூஜை என்பது குறிப்பிடத்தக்கது.

**வீதியுலா :-**

25.09.2024 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னை ஆலயத்திலிருந்து புறப்பட்டு 19ம் கட்டை வீதியூடாக வீதி உலா வந்து குமுழமுனை முத்துமாரி அம்மன் ஆலயம் சென்று அங்கிருந்து மிண்டும் தன் ஆலய இருப்பிடத்திற்கு வந்தடைவார். உற்சவகாலத்தில் 25 நாளும் அன்னதானம் இடம்பெறும்.

**முக்கிய அறிவித்தல் :-**

ஆலயத்திற்குள், ஆலயத்தின் வெளியே வீதியுலா வரும் அன்னையின் பீடத்தைத் தாங்கும் அடியவர்கள் அனைவரும் செவ்வாடை அணிந்திருத்தல் வேண்டும். (ஆண்கள் சிவப்பு வேட்டியும், பெண்கள் சிவப்பு சேலையும் அணிந்திருத்தல் கட்டாய மானதாகும்.) அடியவர்கள் அனைவரும் தவறாது அன்னையின் உற்சவத்தில் கலந்து அன்னையின் அருளினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**முழங்காவில்,**
**நாச்சிக்குடா.**

**ஆலய ஆதீன சபையினர்.**

"ஓம் பிரம்மமே அம்மா உன் திருப்பாத கமலமே சரணம்"
சுபம்

(CS/43111) J-1

## மரண அறிவித்தல்



## கார்த்தி அருந்தவராசா

கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் தொண்டமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தி அருந்தவராசா அவர்கள் நேற்று (28.08.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்தி - தெய்வி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - பசுபதி தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், பூமணி[illegible]யின் அன்பு சகோதரனும், கிருபாகரன், கருணாகரன், தர்சினி, ஞானகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞான[illegible]கர்சினி, தனுஷாந்தினி, முகுந்தன், கேதாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும், தனபைரவி, அபிநயன், சாய்பிரஷாத், சஷ்ணவி, பவிஷ்ணவி, ஹர்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாலை 3.00 மணியளவில் காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு,
**077 615 8087**

தகவல்:
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

"நாம் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள். வடக்கு - கிழக்குத் தமிழர்களுடைய தாயகம், நாம் தனித்துவமானவர்கள், எமக்கு சுயநிர்ணய உரிமையுண்டு. எமது நிலம், மொழி, கலை, கலாசாரம், பண்பாடு போன்றன பாதுகாக்கப்படவேண்டும். அதற்குப் பூரண சுயாட்சி அதிகாரம் எமது பகுதிக்குத் தேவை என்பதை முன்னிறுத்தித் தமிழ்மக்கள் தங்கள் கோரிக்கைக்கான சர்வஜன வாக்கெடுப்பாக ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டு அதற்கான அங்கீகாரத்தைப்பெறவேண்டும். இதன்மூலம் இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் நாம் இன்னும் எமது உரிமைப் போராட்டத்தில் உறுதியாக இருக்கின்றோம் என்பதை அடையாளப் படுத்தமுடியும்.

ஆதலால், தமிழர்களின் ஒற்றுமை, சுயாட்சி மற்றும் சுயநிர்ணயக் கோரிக்கையை நிலைநிறுத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொதுவேட்பாளரான பா.அரியநேந்திரனை ஆதரித்து எமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றி உலகமெல்லாம் ஒலிக்கச் சங்குச் சின்னத்துக்கு தமிழர்கள் வாக்களிக்கவேண்டும்.

தமிழ்த் தலைமைகள் எமது உரிமையை நிலைநாட்டவும், சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கும் எடுத்த முயற்சிகள் அத்தனையும் இன்றுவரை சிங்களத் தலைவர்களால் நிராகரிக்கப்பட்டு உதாசீனப் பட்டுள்ளன. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ஆகக்குறைந்த அதிகாரமான 13 ஆவது திருத்தத்தைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தாமை. பேச்சுவார்த்தை என்ற ரீதியில் காலத்தைக் கடத்தி தட்டிக்கழித்து தந்தை செல்வா தொடக்கம் சம்பந்தர் ஐயா வரை ஏமாற்றியுள்ளார்கள்.

இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்களின் விடிவுக்காக ஜனநாயக முறையில் புதிய அணுகுமுறையாகக்கொண்டு எமது உரிமைகளை வென்றெடுக்க புத்திசாதுரியமாக நடந்து இதனை அணுகுவதே சிறந்த தீர்மானமாக அமையும். இந்த முயற்சிக்கு வடக்கு - கிழக்கில் செயற்படும் தமிழ்த் தேசியம் சார்ந்த அனைத்துக் கட்சிகளும், வடக்கு - கிழக்கில் செயற்படும் அத்தனை பொது அமைப்புகளும், வடக்கு - கிழக்கைச் சேர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் அத்தனை தமிழ் பேசும் மக்களும் தமிழ்ப் பொதுவேட்பாளருக்குத் தங்கள் பேராதரவை வழங்கி வாக்குகளைச் செலுத்தவேண்டும்" - என்றுள்ளது. (அ-ம-66)

## மக்களின்...

மூலமான அதிகாரமும் எமக்குத் தேவையில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சஜித் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த நாட்டின் வளங்கள் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்த அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் சட்டத்தின்முன் நிச்சயம் நிறுத்தப்படுவார்கள். ஐக்கிய மக்கள் சக்தியானது கள்வர்களுடன் டீல் வைக்கவில்லை. ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிக்காக மக்களின் உரிமையைக் காட்டிக்கொடுக்க நாம் தயாரில்லை. அதனால்தான் கள்வர்களுடன் டீல் வைத்து ஆட்சிக்குவர நான் ஒருபோதும் தயாரில்லை.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், கொரோனாத் தொற்று மற்றும் நாட்டை வங்கரோத்து அடையச் செய்தமை ஆகிய மூன்று காரணங்களாலும் நாட்டின் விவசாயிகள் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டார்கள். இயற்கை உர ஊழல் மற்றும் நானோ ஊழல் என்பனவற்றின் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அழுத்தங்களையும், பிரச்சினைகளையும் எதிர்கொண்டுள்ள விவசாயிகளின் விவசாயக் கடன்களை இரத்துச் செய்வோம் எனக் கூறுகின்றபோது அதனை எவ்வாறு மேற்கொள்வது என்று நயவஞ்சகர்கள் கேட்கின்றார்கள். பிணை இன்றி எந்த ஒரு பாதுகாப்பும் இல்லாமல் கோடிக்கணக்கில் வங்கிகளில் கடனைப் பெற்றுக்கொண்டு அதனை மீளச் செலுத்தாதவர்கள் அம்பாறை மாவட்டத்திலும் இருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் செப்ரெம்பர் 21ஆம் திகதியுடன் முடிவுகட்டப்படும்" - என்றார். (அ-ம)

## தமிழரசுக்...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், தமிழரசுக் கட்சி பிளவடைந்து மாற்று அணியொன்று உருவாகவுள்ளதா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் ஒரே நிலைப்பாட்டில் உள்ள தமிழ்க் கட்சிகள் ஒன்றாகவே பயணித்து வருகின்றன. சிலவேளைகளில் கட்சிகளுக்கு இடையில் முரண்பாடுகள் நிலவினாலும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் அனைவரும் ஓர் அணியாகவே செயற்பட்டு வருகிறோம்.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சுமந்திரனும், சாணக்கியனும் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான ஆதரவை இதுவரை வெளியிடவில்லை. அவர்கள் சஜித்தை ஆதரிப்பார்கள் என்று இதுவரை கருதப்பட்ட நிலையில், தற்போது ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பது போன்று கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

தற்போது தமிழரசுக் கட்சிக்குள் உட்கட்சி பூசல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் தமிழரசுக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்த ஒருவர் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். தமிழரசுக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்தும் முயற்சியில் இறங்கியுள்ள நபரே என்னையும் தமிழரசுக் கட்சியையும் பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர். ஆகவே அரசியலில் எதுவும் நடக்கலாம். பொறுத்திருந்து பார்ப்போம்" - என்றார். (அ-ம-20-26)

## எந்த...

தேசிய மக்கள் சக்தியால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில், ஜனாதிபதி ரணிலின் வேலைத்திட்டங்களே காணப் படுகின்றன. ஜனாதிபதி ரணிலின் திட்டங்களைப் பிரதிசெய்து சிறிய மாற்றங்களுடன் அவர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறிருக்கையில், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனமே உண்மையானது என்றும், அதை ஐக்கிய மக்கள் சக்தி பிரதி செய்துள்ளது எனவும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக அநுர, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்கனவே முன்வைத்துள்ளார். ஏனைய இரு முன்னணி வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இருவரும் இன்று தத்தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைக்கவுள்ளனர். இவ்வாறான தொரு பின்னணியிலேயே, விஞ்ஞாபனத்தின் உண்மைப் பிரதி தம்முடையது என்றும், அவற்றை ஏனைய கட்சிகள் பிரதி செய்கின்றன எனவும் மேற்படி தரப்பினர் பரஸ்பரம் நேற்றுக் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம-6-44)

## வவு. கொலை...

செல்லத்துரை விமலநாதன் (வயது - 66) என்பவரே கடந்த 26ஆம் திகதி இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்ற நிலையில், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-110)

## காய்ச்சலால்...

நின்றபோது அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, 16 ஆம் திகதி ஊர்காவற்றுறைக்குச் சென்ற அவர் அங்கு சிகிச்சை பெற்றுள்ளார். காய்ச்சல் குறைவடையாததையடுத்து, மீண்டும் ஊர்காவற்றுறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கடந்த 26ஆம் திகதி மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## விஷஜந்து...

கைதடி வடக்கு - கைதடியைச் சேர்ந்த இராசையா தர்மசேனன் (வயது-45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். காணியொன்றைத் துப்புரவு செய்தபோது விஷஜந்து ஒன்று அவரைத் தீண்டியதாகச் சொல்லப்படுகின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ம-159)

## ரூபா...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே, யாழ்ப்பாணத்தில் இந்த வருடம் முன்னெடுக்கப் பட்டுவரும் திட்டங்கள் தொடர்பிலும் அதற்கான நிதியொதுக்கீடு தொடர்பிலும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

முடிவுறுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு உரிய தெளிவூட்டல்கள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், திறைசேரியிடம் இருந்து வழங்கப்பட்ட நிதியை உரியவாறும் முழுமையாகவும் பயன்படுத்தவேண்டும் என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், மாவட்டத்தில் நிலவும், குடிதண்ணீர்ப் பிரச்சினை, வீதி சீரின்மை, காணிப் பிணக்குகள், போக்குவரத்துச் சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்தும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துகள் பரிமாற்றப் பட்டன. (அ-ம-26-20)

## 23...

பதித் தேர்தலில் போட்டியிடவுள்ள 38 வேட்பாளர்களில் 15 பேர் மட்டுமே தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளனர் என்று தேர்தல் கற்கைகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

சில ஜனாதிபதி வேட்பாளர்களைத் தொடர்புகொள்ளவே முடியவில்லை. இன்னும் சில வேட்பாளர்களின் பரப்புரைக்கூட்டங்களில் 10 பேர் கூடக் கலந்துகொள்வதில்லை. ஐந்து ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பேஸ்புக் கணக்குகள் இல்லை. இரண்டு வேட்பாளர்களின் திறன்பேசி இலக்கங்கள் செயலிழந்துள்ளன. மூன்று வேட்பாளர்கள் தேர்தல் தொடர்பில் எந்தவொரு அறிக்கையையும் வெளியிடவில்லை என்றும் ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவனம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (அ-ம-6)

## யாழ்ப்பாண...

கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே பொதுமக்களால் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் முறைப்பாட்டைக் கேட்டறிந்த வடமாகாண ஆளுநர், யாழ்ப்பாணம் பேருந்துத் தரிப்பிடத்திலும், முற்றவெளியைச் சூழவுள்ள பகுதிகளிலும் பொலிஸார் திடீர்க் கண்காணிப்பை மேற்கொள்ளவேண்டும் என்று உத்தரவிட்டார். அத்துடன், சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறும் இதர இடங்களைக் கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும், இதற்காக சிறந்த பொறிமுறை ஒன்றை உருவாக்கிக் கொள்ளுமாறும் ஆளுநர் மேலும் தெரிவித்தார். (அ-ம-26)

## மன்னாரில்...

மன்னார், தோட்டவெளியைச் சேர்ந்த இருவரும், மாந்தை மேற்குப் பகுதியைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை உயிலங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-213)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளர் பரப்புரை பயணவிவரம்

பொலிகண்டி தொடக்கம் பொத்துவில் வரையான தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனின் 'நமக்காக நாம்' பரப்புரைப் பயணம் கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று மூன்றாவது நாளாக முன்னெடுக்கப்படவுள்ளது.

காலை 9.00 மணிக்கு தேர்தல் பரப்புரைகள் காக்கா கடைச் சந்தியில் இருந்து ஆரம்பித்து வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு, தருமபுரம், விஸ்வமடு, பிரமந்தனாறு, புளியம்பொக் கணை, முரசுமோட்டை ஊடாகப் பயணித்து பரந்தன் சந்தியை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)

## மரண அறிவித்தல்



பிறப்பு
02 . 04 . 1979

இறப்பு
27 . 08 . 2024

### அருள்நேசன் அருள்வதனன் (வதனன்)

சசி மில் லேன் சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாயை நிரந்தர வதிடமாகவும், சேவிஸ் வீதி, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட அருள்நேசன் அருள்வதனன் (வதனன்) நேற்றுமுன்தினம் (27.08.2024) செவ்வாய்க்கிழமை 155ம் கட்டை, ஏ9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற அருள்நேசன் - சந்திரவதனி தம்பதியினரின் மூத்த புதல்வனும், வனிதா (ரூபி) யின் அன்புக் கணவரும், இந்துஜா (மாணவி- கிளி மத்திய கல்லூரி), இந்துஜன் (கனாகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமசாமி-ஜீவராணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயவதனி, திவ்வியவதனி, திருபவதனி, கோகிலவதனி, டினேஸ், லோகிதன், தேவகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் - சசி மில் ஒழுங்கை, சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய் என்னும் முகவரியில் உள்ள அவரது தாயாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கிரிகைகள் இன்று (29.08.2024) வியாழக்கிழமை மாலை 03.00 மணியளவில் இல்லத்தில் இடம்பெற்று, தகனக் கிரிகைகள் விளாவெளி இந்து மயானத்தில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தொடர்புகளுக்கு : 0771632147
0766395647
0765891184

தகவல்:
குடும்பத்தினர்.

## ஐ. ம.கூட்டணி இரும்பு அணி

கொழும்பு, ஓக.29

ஐக்கிய மக்கள் கூட்டணியென்பது இரும்புக் கதவைக் கொண்ட அணியாகும். ஊழல்வாதிகள் உள்வருவதற்கு இரும்புக் கதவு ஒருபோதும் திறக்கப்படமாட்டாது.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். எமது கூட்டணியின் கதவானது இரும்புக் கதவாகும். கொள்ளையர்கள் மற்றும் மோசடியாளர்கள் அந்தக் கதவு ஊடாக வரமுடியாது. நாட்டை நாசமாக்கிய மோசடியாளர்களுக்கு எமது கதவு ஒருபோதும் திறக்கப் படமாட்டாது. ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நாளை (இன்று) வெளியிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## இந்தியத் தூதரகம் பங்களாதேஷில் முற்றுகை

டாக்கா, ஓக.29

பங்களாதேஷில் உள்ள இந்தியத் தூதரகத்தை முற்றுகையிட்டு பங்களாதேஷில் இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பங்களாதேஷில் அண்மையில் இடம்பெற்ற அசாதாரண சூழலையடுத்து அங்குள்ள இந்தியத் தூதரகம் விசா வழங்குவதை நிறுத்தியுள்ளது. இதையடுத்து பங்களாதேஷ் இளைஞர்கள் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியுள்ளனர். இளைஞர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக தமக்கு தூதரகத்தில் கடமையாற்றுவதற்கு அச்சமாக உள்ளதாக தூதரகத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-6)

## மரண அறிவித்தல்

லங்கா தேசமான்ய

### லயன் பத்மநாதன் ஐங்கரன் MJF

(ஊடகவியலாளர் - வலம்புரிப் பத்திரிகை, தலைவர் - தீவக லயன்ஸ் கழகம், தலைவர் - யாழ் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், முன்னாள் தலைவர் - யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகம்)

மலர்வு
28.07.1974

மறைவு
26.08.2024



காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும் சிவகுருநாதன் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட யாழ். பிரதேச செயலக சமுர்த்தி உதவி முகாமையாளரான பத்மநாதன் ஐங்கரன் கடந்த 26.08.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இங்கிரியா பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற பத்மநாதன் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வுபெற்ற CTB நடத்துநர்) - செவ்வந்தியம்மா (நேசம்) தம்பதியரின் அன்பு மருமகனும், யாழினி (தேசிய சேமிப்பு வங்கி - மானிப்பாய்) அவர்களின் அன்புக் கணவரும், ஜஸ்விந் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹேமாவதி, கௌரிஅம்பாள் (அதிபர் - காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), கல்யாணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலினி, நாகேந்திரன் (சட்டத்தரணி - லண்டன்), கமலேந்திரன் (பொறியியலாளர் - கனடா), கெங்காதரன், அருள்மொழி, கணேசலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், உதயகுமார், பகீரதி, காயத்திரி ஆகியோரின் சகலனும், சபேசன், சஞ்சீவன், சஜீவன், சசிரூபன், சானுஜன், நிசாந்தி, சயந்தன், வசீகரன், கஜீபா, தாராதேவி, லக்ஸ்மிகா, அயன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிசாந், றொசாந், லக்சிகா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவர்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29.08.2024) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் யாழ்ப்பான இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20/3, சிவகுருநாதன் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
077 429 0513
(யாழினி - மனைவி)

தகவல்:
மனைவி, மகன்,
சகோதரர்கள்,
மைத்துனர், குடும்பத்தினர்.

(cs.56045) (N-1)

செய்தி :021 493 0000 - விளம்பரம் :021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.